CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# பாராளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல்கள் இடம்பெறவேண்டுமென்று தெரிவித்த சனாதிபதியின் பிரகடனம் சம்பந்தமான CPA அறிக்கை

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாகவும், அவசியமற்ற வகையிலும் இலங்கையின் அரசியலமைப்பைக் குடைகவிழ்க்கும் விதத்தில் செயலாற்றி வருவது குறித்து, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) பீதிகொண்டுள்ளது. இது ஒக்தோபர் 26 ஆம் திகதிமுதல் இதற்குமுன்னர் எப்பொழுதுமே இடம்பெற்றிராத வகையிலான அரசியலமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பில் மிகவும் பிந்திய நிகழ்வு நவம்பர் 09 ஆந் திகதி இடம்பெற்றது. இதன்போது சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு பிரகடனத்தை விடுத்து (விசேட வர்த்தமானி 2096.⁚.70) 08 ஆவது பாராளுமன்றத்தைக் கலைத்து, 2019 சனவரி 05 ஆந் திகதி பொதுத்தேர்தல் இடம்பெறவேண்டுமென்று தெரிவித்துள்ளார். CPA இந்த நடவடிக்கைகளுக்கு உறுதியான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது. இது அரசியலமைப்புக்கு விரோதமானதும், அதிகாரவலுவற்றதுமாகும். இதன்பிரகாரம் CPA **2018** நவம்பர் 12 ஆந் திகதியாகிய இன்று தனது சார்பிலும், நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து சார்பிலும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

CPA யின் நிலைப்பாடு உறுதியானதாகும். இலங்கை அரசியலமைப்பின் 70(1) ஆம் உறுப்புரை, 33(2)(உ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும்போது, அது சனாதிபதி தற்போதைய பாராளுமன்றத்தின் முதல் அமர்விலிருந்து நாலரை வருடகாலம் முடிவடைவதற்கு முன்னராகப் பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியாது என்பதையும்· அல்லது பாராளுமன்ற அங்கத்தினர்களின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையானோர் தீர்மானம் நிறைவேற்றி, வேண்டிக்கொள்வதன்பேரில் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்பதையும் மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந்த இரு நிபந்தனைகளில் எதுவுமே நிறைவேற்றப்படாமையால், சனாதிபதியின் பிரகடனம் செல்லுபடியற்றதாகும்.

நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக்குறைக்கும் வகையில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது கூட்டணி அரசாங்கமும் அளித்த முக்கிய வாக்குறுதிகளினடிப்படையில் 2015 இல் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தச் சட்டவாக்கம் இடம்பெற்றது. 70 ஆம் உறுப்புரை இத்தகைய ஓர் ஏற்பாடாகும். அது சனாதிபதி ஒருதலைப்பட்டசமாகப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை இல்லாமற் செய்தது.

பத்தொன்பதாவது திருத்தச் சட்டவாக்கம் அரசாங்கத்தின் ஓர் அங்கம் வேறோர் அங்கத்தின் கருமப்பாடுகளை நிறுத்துவதை அல்லது ஒடுக்குவதைத் தடுக்கும்வகையில் செவ்வைபார்த்தல்கள், சமநிலைப்படுத்தல்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீட்டெடுத்து, வைத்தமைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டதாகும். இது எமது ஜனநாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாகும். சனாதிபதி சிறிசேனவின் நடவடிக்கைகள் நிறைவேற்றுத்துறை பாராளுமன்றத்தின் கருமப்பாட்டை அடக்கியொடுக்கும் ஓர் அப்பட்டமான முயற்சியாகும். சட்டநிலைப்பாடும், பத்தொன்பதாவது திருத்தத்தின் பின்னாலுள்ள அரசியல் இயக்கவிசையும் தற்போதைய செயற்பாடுகள் சட்டரீதியாகவும், அரசியல்ரீதியாகவும், தார்மீகரீதியாகவும் செல்லுபடியற்றவை என்பதை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கின்றன.

அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் இடம்பெற்ற பாராளுமன்றக் கலைப்பும், பொதுத்தேர்தல்களுக்கான அழைப்பும் சனாதிபதி சிறிசேன நியமித்த புதிய அரசாங்கத்தின் சட்டபூர்வத்தன்மை உள்ளிட்டவகையிலான தீர்க்கப்படாத எண்ணிறந்த விவகாரங்கள் இடம்பெற்ற சமீபத்திய வாரங்களின் நிச்சயமற்ற நிலைமையை மேலும் மோசமாகியுள்ளன. உடனடிச் சூழமைவில் இது இலங்கையர்களுக்கு அவசியமற்ற வகையிலான பாரிய நிச்சயமின்மை நிலையைத் தோற்றுவித்து, பரவும் குழப்பங்கள் மத்தியில் இடம்பெறக்கூடிய அரசியல் வன்செயல்களின் இடர்வரவுத் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் பரந்தவொரு சூழமைவில் இது சனாதிபதி சிறிசேன இயக்கம் நடத்தியதும், தெரிவுசெய்யப்பட இட்டுச்சென்றதுமான அடிப்படைச் சனநாயக வகைப்பொறுப்புக் கோட்பாடுகளின் வெறுக்கத்தக்க மீறலாகும். இவ்விரண்டு காரணங்களின் நிமித்தமும் CPA இந்த அப்பட்டமான, ஆபத்தான அதிகாரத் துஃபிரயோகங்களுக்கெதிராக உறுதியாக எழுந்து நிற்குமாறும், தமது ஜனநாயக உரிமைகளைக்கோரி, வலியுறுத்துமாறும், இலங்கையின் அரசியலமைப்பை உயர்த்திப்பிடிக்குமாறும் சகல இலங்கையர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றது.